STC.No.328/2024 PW 5-ரவிக்குமார் நாள்-13.02.2025

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் முதல் தகவல் அறிக்கையில் அசால்ட் இண்டிமேசன் தனக்கு கிடைக்கப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது எனகுறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-1 புகார் வாக்குமூலத்தில் அடித்தல் திருத்தங்கள் இடத்தில் மேற்குறிப்புகள் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில் அ.சா.1 மேற்படி மரங்கள் வெட்டப்பட்டு இருந்த இடத்தை புகைப்படம் எடுத்துக்கொண்டு இருந்தார் என்றும், அப்போது இந்த வழக்கின் எதிரி அ.சா.1 -ன் செல்போனை பிடுங்கி எரிந்தார் என எனது விசாரணையில் சொல்லியிருந்தாரா என்றால் இல்லை.

எனது விசாரணையில் புகார்தாரர் எதிரி டிப்பர் லாரியில் இறங்கி வந்து அ.சா.1-யை அடித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் மயில் என்கிற காமராஜ் அ.சா.1 செல்போனில் புகைப்படம் எடுத்ததில் எதிரி செல்போனை பிடுங்கினார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது விசாரணையின் போது அ.சா.3 சம்பவத்தின் போது இருந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ-5 ஆகியவற்றில் சம்பவ இடத்தை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்று எனக்கு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தி.மு.க ஒன்றிய தலைவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

புகார்தாரர் முதல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை நான் சென்று பார்வையிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ-5 ஆவணங்களில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அருகே நிறைய வீடு உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அருகில் இருந்த வீடுகளில் உள்ள நபர்களை நான் இந்த வழக்கில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. விசாரித்த போது சம்பவ சமயம் தாங்கள் இல்லை என கூறியதால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

மேற்கூறிய விபரத்தை வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் இரவு நேரம் என்பதால் எதிரி தான் தாக்கினார்கள் என எவ்வாறு பார்த்தாக என்னிடம் சொன்னார்கள் என்றால் EB கம்பத்தில் இருந்த லைட் வெளிச்சத்தில் பார்த்ததாக சொன்னார்கள். அ.சா.ஆ5 மாதிரி வரைபடத்தில் மின் விளக்கு இருந்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகாரை பெறப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.